உதயன்

விலை ரூபா 10.00


www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 05 புதன்கிழமை (20.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 25

# பாலசிங்கத்துக்குப் 'பிரியாவிடை'

# லண்டனில் இன்று இறுதி நிகழ்வு

## அலெக்ஸாண்டிரா பலஸில் அஞ்சலி வைபவம்
## ஆயிரக்கணக்கில் புலம்பெயர் தமிழர்கள் வருகை



லண்டன்,டிசெம்பர்20

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் புகழுடல் லண்டனிலுள்ள அலெக்ஸான்டிரா மாளிகையில் - அலங்கரிக்கப்பட்ட மேடையில் - இன்று மக்களின் இறுதி அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் மாலையில் தகனம் செய் யப்படும்.

லண்டன் நேரப்படி காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை அலெக்ஸான்டிரா மாளிகையில் புகழுடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவர். மதியுரைஞரை நேரில் பார்த்து அவருக்கு தங்கள் இறுதி வணக்கத்தைச் செலுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இருந்து ஆயிரக்கணக்கில் புலம்பெயர் தமிழர்கள் லண்டனுக்கு வந்து குவிந்துள்ளனர்.

அன்ரன் பாலசிங்கத்தின் புகழுடல் தற்போது லண்டனிலுள்ள மலர்ச்சாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து அவரது உடல், இன்று லண்டன் நேரப்படி காலை 8 மணிக்கு அலெக்ஸான்டிரா மாளிகைக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு பிற்பகல் 3 மணி வரை பொது மக்கள் அஞ்சலி செலுத்துவர்.

மதியுரைஞரும், தத்துவாசிரியருமான பாலசிங்கத்தின் மாவீரர் தின உரையைச் செவிமடுப்பதற்காக ஆண்டுதோறும் அலெக்ஸான்டிரா மாளிகையில் வந்து திரளும் புலம்பெயர் தமிழர்கள் இன்று அவருக்குப் பிரியாவிடை கொடுப்பதற்காக அங்கு வருகை தர இருக்கின்றனர்.

அன்ரன் பாலசிங்கத்தின் புகழுடலைத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று விசேட அஞ்சலி!

யாழ்ப்பாணம், டிசெ.20

லண்டனில் காலமான விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் விசேட அஞ்சலி நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

விசேடமாக அமைக்கப்பட்ட ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்த அன்ரன் பாலசிங்கத்தின் உருவப்படத்துக்கு யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளும் பல்கலைக்கழக வளாகத்தில் தொங்க விடப்பட்டிருந்தன. இந்த அஞ்சலி நிகழ்வில் பல்கலைக்கழக சமூகத்தினர் கலந்துகொண்டனர். (ஐ-8)

## இன்றைய இறுதி அஞ்சலி நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள்

கொழும்பு,டிசெ20

லண்டனில் இன்று நடைபெறும் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் இறுதி நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்துகொள்வர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

லண்டனில் தற்போது தங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரநேரு சந்திரகாந்தன், பா.அரியநேத்திரன் மற்றும் கஜேந்திரகுமார்பொன்னம்பலம்ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கலந்துகொள்வர் என்று அவர் கூறி னார்.

மறைந்த அன்ரன் பாலசிங்கத்தின் இறுதிக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ் பண்டிகை காலத்திலாவது மோதலைத் தவிர்க்கக் கோரிக்கை

### இரு தரப்பையும் கேட்கிறது போருக்கு எதிரான முன்னணி

கொழும்பு,டிசெ20

எதிர்வருகின்ற கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் தாக்குதல்களைத் தவிர்த்து - போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு - யுத்தத்துக்கு எதிரான தேசிய முன்னணி அரசிடமும், விடுதலைப் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்ற தேசிய முன்னணி, தற்போதைய யுத்தச் சூழ்நிலையால் நாட்டில் பெருமளவு மக்கள் அளவற்ற மனிதாபிமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று அதில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

எனவே, மக்கள் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடும் முகமாக, பண்டிகைக் காலத்திலாவது இரு தரப்பும் மோதலைத் தவிர்த்து யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் போருக்கு எதிரான முன்னணி கேட்டிருக்கிறது.

அத்துடன், வன்முறைகளுக்கு அரசியல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு தேசத்தின் தூதுவர் போன்று மதிக்கப்பட்டவர் புலிகளின் மதியுரைஞர்

### லண்டன் பத்திரிகையில் இவ்வாறு புகழாரம்

கொழும்பு, டிசெ.20

லண்டனிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில நாளேடான "த இண்டிபென்டன்" தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான "தேசத்தின் குரல்" கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தொடர்பான ஆய்வு ஒன்றை தனது நாளேட்டில் வெளியிட்டுள்ளது.

ஜஸ்ரின் கூக்லர் (Justin Huggler) என்பவர் எழுதிய இந்த ஆய்வில், "போராளிக் குழுவின் சர்வதேச தொடர்பாடலுக்கு உரியவராக செயற்பட்ட அன்ரன் பாலசிங்கம் ஐரோப்பிய நாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தார்" எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன், அன்ரன் பாலசிங்கத்துக்கு நோர்வே நாட்டுப்பிரதமர் அனைத்துலக நாடொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தேசத்தின் தூதுவருக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை கொடுத்தார் எனவும் எழுதியிருக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இணையாக குரல் தரவோ, முடிவுகள் எடுக்கக்கூடிய தகைமையுள்ளவர் அன்ரன் பாலசிங்கம் என்றும் மாவோ மற்றும் சேகுவேரா போன்றோரின் கொள்கைகளில் கைதேர்ந்தவர் அன்ரன் பாலசிங்கம் எனவும் தன்னுடைய ஆய்வில் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிரபாகரனுக்கும் பாலசிங்கத்திற்குமிடையே இருந்த பொருத்தம், போராட்டத்தையும் விடுதலைப்புலிகள் அமைப்பையும் மிகவும் சக்திவாய்ந்தவையாக வடிவமைத்திருந்தன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (08ஆம் பக்கம் பார்க்க)

## பன்முக வரவு - செலவு நிதி திரும்பிச்செல்லும் நிலையில்

யாழ்பாணம், டிசெ.20

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பெரும் எண்ணிக்கையான வேலைத் திட்டங்களுக்குரிய நிதி திரும்பிச் செல்லும் நிலையில் உள்ளன.

இவ்வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் செலவினக் கணக்குகளை இம்மாதம் பதினைந்தாம் திகதி முடிவுறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் விமானசேவை இன்று மீண்டும் ஆரம்பம்

யாழ்பாணம், டிசெ.20

கொழும்புக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தனியார் விமான சேவை மீண்டும் இன்று ஆரம்பமாகின்றது என்று 'எக்ஸ்போ ஏயர்' நிறுவன வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

சேவையில் ஈடுபடும் விமானங்களை வழமையான பழுது பார்க்கும் பணிகளுக்கு உட்படுத்தவேண்டியிருந்ததால் கடந்த 15 ஆம் திகதி சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் பணிகள் பூர்த்தியானதையடுத்து இன்று மீண்டும் சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கடற்கொந்தளிப்பு நிலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை அரசு தடைசெய்திருந்தால் நாடு இப்போது பெரும் யுத்தகளமாக மாறியிருக்கும்

### பிரதி அமைச்சர் டிலான் இப்படிச் சொல்கிறார்



கொழும்பு,டிசெ.20

தற்போதைய சூழ்நிலையில், விடுதலைப் புலிகளை அரசாங்கம் தடை செய்திருந்தால் நாடு தீவிரமான யுத்தகளமாக மாறியிருக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் அரசமைப்பு விவகாரபிரதி அமைச்சர் டிலான் பெரேரா.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது: நாட்டின் 80 சதவீதமான மக்களின் அபிப்பிராயத்தையே இனப்பிரச்சினை தீர்வு யோசனையாக புத்திஜீவிகள் குழுவினர் சமர்ப்பித்துள்ளனர். இந்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகின்றேன்.

ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் இந்த யோசனையை எதிர்த்து சர்வ கட்சி ஆலோசனைக் குழுவிலிருந்து விலகியமை வேடிக்கையாகும். காரணம் இந்த யோசனையை அரசாங்கம் இன்னும் அங்கீகரிக்கவில்லை. ஜே.வி.பிக்குத் தேவையான யோசனையை முன்வைக்க வேண்டுமானால் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் புத்திஜீவிகள் குழுவை நியமித்திருக்கவேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக புத்திஜீவிகள் குழுவின் 11 உறுப்பினர்கள் முன்வைத்துள்ள யோசனையை தனிப்பட்ட ரீதியில் நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதில் சில முரண்பாடான விடயங்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயலட்சுமி தர்மசீலன்



அல்லாரை வடக்கு,கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும்18/3, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சமி தர்மசீலன் நேற்று(19.12.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார்நாகமுத்து காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பூவிலிங்கம் மற்றும் றோசம்மாவின் அன்பு மருமகளும் தர்மசீலனின் (அம்மினி) அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் பூதவுடல்தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்துமயானத்திற்கு இன்று(20,12.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*18/3,கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.* (63562)
**தர்மசீலன் (அம்மினி - கணவர்).**

## செல்லையா பாலசிங்கம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலசிங்கம் 19.12.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் மார்க்கண்டு - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் யோகமலரின் அன் புக் கணவரும் உதயபாலச்சந்திரன் (கனடா), விஜியபாலசந்திரன் (லண்டன்), விஜிஜா (லண்டன்), குமுதினி (லண்டன்), ஜெயபாலசந்திரன் (லண்டன்), ஆனந்தி (ஜேர்மனி), சிவபாலச்சந்திரன் (பிரபு) ஆகியோரின் தந்தையும் சுகந்தினி (கனடா), மஞ்சுளா (லண்டன்), குந்தவி (லண்டன்), ரவி (லண்டன்), ராஜன் (லண்டன்), ரமணன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் இந்துஜன், இந்துஜா, கார்திக், சுடர், ஜனந்தினி, ரம்ஜா, பேபி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற செல்லையா காசிப்பிள்ளையின் சகோதரனும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை சசிகுமாரன், நந்தகுமாரன், சிவனேஸ்வரி, புஸ்பவதி (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் பரமேஸ்வரி, பூபதி, வசந்தா, சறோசாதேவி (ஜேர்மனி), யோகநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2006) ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(63551)
**யோகமலர் (மனைவி), பிரபு(மகன்).**

## வல்லிபுரம் கதிரவேலு



இளவாலை, சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய், ஆலங்குளாயை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கதிரவேலு நேற்று(19.12.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் வரதலட்சுமி, பகீரதி(ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சவுந்தரராணி(ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி)ஆகியோரின் அன்புத் தந்தையும் சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற T.O.), சுந்தரலிங்கம்(G.S.,கோப்பாய்), சிவகுமார்(சுவர்ணவாஹனி கூட்டுத்தாபனம்)ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற கனகம்மா, காலஞ்சென்ற பாக்கியம், அப்புத்துரை(ஓய்வூதியர்), நாகராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் சுஜீபா (மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்), சதீபா(மாணவி, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), டினேஷ்ஷாந் (மாணவன்,யாழ்.இந்துக் கல்லூரி), டிலக்ஷனா (மாணவி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.12.2006)புதன்கிழமைகாலை 9 மணியளவில்ஆலங்குழாய்இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்தகனக்கிரியைகளுக்காக சிறுவிளான் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*ஆலங்குளாய் வீதி, சண்டிலிப்பாய்.* (63566)
**மனைவி,பிள்ளைகள், மருமக்கள்**

## பேரின்பநாயகம் மரியறூபநாயகம்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் சில்லாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பேரின்பநாயகம் மரியறூபநாயகம் நேற்று(19.12.2006) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரின்பநாயகம் -நவமணி தம்பதியரின் மகனும் பிலிப்பையா, விக்ரோறியா தம்பதியரின் மருமகனும்அன்ரோனியா டெஸ்சியின் அன்புக் கணவரும் மெற்றில்டா, டிலைக்ஷனா , மரிய தருஷனா, அன்ரனிறொபின்சன், மரியறெனிஸ்ரா ஆகியோரின் அன்புத் தந்தையும் கி[illegible]ரியநாயகம் (கரித்தாஸ் நிறுவனம், திருகோணமலை), கருணைநாயகம்( ஆசிரியர்சென்.ஜோண்ஸ் கல்லூரி- யாழ்ப்பாணம்), இன்பநாயகம்(கனடா), நேசநாயகம்(கனடா), மதுரநாயகம் (பிரான்ஸ்), அமரர்தயாளநாயகம்( மிருக தொழில்நுட்பவியலாளர், வவுனியா), அருமைநாயகம்(பிரான்ஸ்), சாந்தகுமாரி(ஆசிரியை, வெஸ்லி கல்லூரி,கொழும்பு), வசந்தநாயகம்(லண்டன்),பாலநாயகம்(லண் டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் றீற்றா,புஸ்பராணி, சகாயராசா (கனடா), லூடஸ் மேரி, ஜெமி யெம் லூயிஸ்(கனடா), ஜெசிந்தா(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(20.12.2006)புதன்கிழமை பி.ப.2.30 மணியளவில் புனித கதிரமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*சில்லாலை, பண்டத்தரிப்பு.* (63563)
**குடும்பத்தினர்.**

## கந்தையா சண்முகம்



மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.321, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டகந்தையா சண்முகம் 19.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மாரிமுத்து தம்பதியரின் மகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி ஐயம்பிள்ளை, காலஞ்சென்ற பூங்காவனம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திராணி(ஜேர்மனி), இரா ஜேஸ்வரன்(தவம்- நதியா நகை மாடம்), தர்மராணி (ஜேர்மனி), சர்வேஸ்வரன்(லண்டன்),ஜெகதீஸ்வரன்(கண்ணன் - புதிய நதியா நகைமாடம்), யோகராணி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந் தையும் பரமலிங்கம்(ஜேர்மனி), இரட்ணபவா(கீதா), சத்தியதாசன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி(லண்டன்), ஜெயந்தி,பாஸ்கரன்(ஜேர்மனி), ஆகியோரின் மாமனும் நிரோசன், நிஜந்தன், நிஷா, கௌசன், நதியா, சபிதா, பிரியங்கா, பிரியந்தன், றஜித், அஜித், சபீனா, சஜித், சஸ்விந், தீபிகா, ஜவனிகா, சுஜாந்,விதுசாந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.12.2006)புதன்கிழமை நண்பகல் 12 அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*இல.321, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* (63560)
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

**விற்பனைக்கு**

பஜாச் முச்சக்கர, இருசக்கர உதிரிப்பாகங்கள் அனைத்தும் குறைந்த விலையில் பழைய விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**கோப்பாய் வீதி, ஞானவைரவர் கோவிலடி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

**ஆரணி ஒட்டோர்ஸ்**

தொ.பே.: 021 222 6942

# மரண அறிவித்தல்கள்

## குட்டியர் பூலோகநாதன்

புத்தூர்(அம்பொட்டை) குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் புறாப்பொறுக்கி ஆலடியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியர் பூலோநாதன் 16.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் நடனரூபன் (கொம்பியூட்டர் எஞ்ஜினியர் - லண்டன்), தயாபரன் (வருமானவரிக் காரியாலயம் - கொழும்பு),மயூரம்(கொழும்பு),பகீரதன் (பிரான்ஸ்), ஊர்மிளா(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சின்னக்குட்டியின் அன்பு மகனும் மேகநாதன்(ஆசிரியர்),யோகநாதன் (பிரான்ஸ்), திருலோகநாதன்(புத்தூர்),பரமேஸ்வரி, திலகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சின்னத்தம்பி(இரத்தினம்);அமரர் மகாதேவன்,சி.பார்வதி, ஆ.பூமணி ஆகியோரின் மைத்துனரும் சிவகுரு, ஆறுமுகம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2006)புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில்நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஆலடி, புறாபொறுக்கி.*
**குடும்பத்தினர்.**

## நாகலிங்கம் இராசம்மா

அரசடி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நாகலிங்கம் இராசம்மா 19.12.2006 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் மனைவியும் ஓய்வு பெற்ற இ.போ.ச. சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் நா.குமாரசாமியின் பாசமிகு தாயும் தர்மபூபதியின் பாசமிகு மாமியும் குமுதினி, குகதர்சன், குகாயினி கனலிங்கம், பிறேமலதா பிரபாகர் ஆகியோரின் பாட்டியும் கவிகேஷா, ஆதித் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (20.12.2006) புதன் கிழமை முற்பகல்10 மணிக்கு உயரப்புலம் ஆனைக்கோட்டையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி மயா னத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அரசடி, கொக்குவில் மேற்கு.*
**குமாரசாமி(மகன்).**

## திருமதி யேசுதாசன் ஜெசிந்தா நிம்மி

11/1, ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யேசுதாசன் ஜெசிந்தா நிம்மி நேற்று(19.12.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - செல்வராணி தம்பதியரின் அன்பு மகளும் கபிரியேல் பிள்ளை யேசுதாசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயசிங்கம், பீற்றர்சண் விஜயசிங்கம்(நிர்வாகி சாம்றொக் அக்கடமி), விஜயராணி (கனடா), றூபசிங்கம்(இளைப்பாறிய இலங்கை வங்கிஉத்தியோகத்தர்), காலஞ்சென்ற றணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் D.A.M. குணசிங்கத்தின் அன்பு மருமகளும் ஆனந்தராணி,செல்வராணி, பத்மராஜா (கனடா),யூடித் ஆகியோரின் மைத்துனியும் தொம்சன்(அமெரிக்கா), ராஜ்குமார்(கனடா), றெக்ஸ்றூபபதி (I.C.R.C.) ஜோண்(கனடா), ஆகியோரின் சித்தியும் சிந்தியா(கனடா), டிலாணி(ஆசிரியர் யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்.), றுஷாணி(ஆசிரியர், யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்.) அருண்(லண்டன்), சாளெட் (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல்இன்று(20.12,2006) புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கொய்யாத் தோட்டம் கிறீஸ்துஅரசர் ஆலயத்தில்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
***11/1, முதலாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.***
பீற்றர்சண் விஜயசிங்கம் (சகோதரர்).

## செங்கலடியில் கிளைமோர் மீட்பு

மட்டக்களப்பு - செங்கலடிப் பகுதியில் நேற்றுக்காலை இரண்டு கிளைமோர்க் குண்டுகளைப் பொலிஸார் மீட்டிருக்கின்றனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்தக் கிளை மோர்க் குண்டுகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கலடிப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரை இலக்குவைத்து இந்தக் கிளை மோர்க் குண்டுகள் பொருத்தி வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ - 3)

# மரண அறிவித்தல்கள்

## செல்லமுத்து விநாயகமூர்த்தி



(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை- வவுனியா)

வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து விநாயகமூர்த்தி நேற்று(19.12.2006)செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் இராமலிங்கம் (ஓவசியர்) - காலஞ்சென்ற சவுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் லலிதாம்பிகையின்(முகாமைத்துவ உதவியாளர், நல்லூர் பிரதேச செயலகம்)அன்புக் கணவரும் ரஜீவன் (அபிவிருத்தி உதவியாளர், யாழ். போதனா வைத்தியசாலை), மயூரன்(லண்டன்), நிருபன்(4ம் வருடம், முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), சுஜீவன்(2 ஆம் வருடம், பொறியியற்பீடம், மொறட்டுவ பல்கலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவாஜினியின்(ஆசிரியை, மல்வானை) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.12.2006)புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*'திருவரங்கம்' உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்* (63571)
**வி.லலிதாம்பிகை (மனைவி).**

## வைத்தியகலாநிதி அதிரியான் பேதுறு அருளப்பன்

(D.A.M. & D.I.M.S)



கோப்பாய் தெற்கு, மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் புனித அந்தோனியார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி பேதுறு அருளப்பன் நேற்று(19.12.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறு - ஞானப்பூ தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் - மோட்சலங்காரம் தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற நீற்றம்மாவின் அன்புக் கணவரும் கலாநிதி பிரான்சிஸ்சேவியர் (PHD,ஹொலண்ட்), அருட்சகோதரி பிரான்சிஸ்கா அற்புதமலர் (காமலைற் சபை), Dr.திரேஸ்அன்ரனிட்டா (D.A.M.), மரியகொறற்றி, அன்ரன்கிறேசியன் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி),Dr.அன்ரன் அனஸ்ரின் (BSMS ,மட்டுநகர்), அமலசபீனா(U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் றெமோனா (ஹொலண்ட்), யோசேவ்(M Phill ஆசிரியர் யா/ வீமன்காமம் ம.வி. தெல்லிப்பழை),தேவநேசன் தவஅலங்காரம்(B.Com ,ஆசிரியை யா/ றோ.க.த.க பாடசாலை, சுன்னாகம்), Dr.வனிதா (BSMS,மட்டுநகர்), ஜெனோசியஸ் (ஜோய்), அத்தனாசியார் (U.K.) ஆகியோரின் அன்பு மாமனும் பிரகாசினி பிரான்சிஸ்கா, றிச்சார்ட் (ஹொலண்ட்), டெஸ் மன், ஹர்ஸியா, டண்ஸ்ரன், குளோறியா (U.K.), காசில்டா (U.K.) ஆகியோரின் அன்புப் பேர னுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.12.2006) வியாழக்கிழமை முற் பகல் 11.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியின் பின்னர் புனித அந்தோனியார்சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*டாக்டர் சுப்பிரமணிய வீதி, பேருந்து நிலைய அருகில், சுன்னாகம்.* (63567)
**Dr.திரேஸ் (மகள்).**

## திருமதி தியாகராசா மகேஸ்வரி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தியகராசா அவர்கள் நேற்று(19.12.2006) பி.ப. 3 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியகரர்சாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் மனோன்மணி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, செல்வராணி, இரஞ்சிதமலர், கிருஷ்ணதாசன்(ஆசிரியர், கொழும்பு) யோகநாதன், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற சிவராசா, காலஞ்சென்ற நவரத்தினம், செல்வராசா, சுரேந்திரநாதன், காலஞ்சென்ற யசோதை, திலகவதனி, கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (20.12.2006) செவ்வாய்க்கிழமை ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் விலங்கன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.* (63572)
**நா.யோகநாதன் (தம்பி).**

## சிற்றம்பலம் கந்தையா

மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்றம்பலம் கந்தையா காலமாகிவிட்டார்.

அன்னார் சிற்றம்பலம் - தெய்வானை தம்பதியரின் மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் சகோதரனும் புஸ்பராணி, பவளேந்திரன், தவராணி, ருக்குமலர்,தேவராணி ஆகியோரின் தந்தையும் லவதாசன், அருந்தவராசா, மனோகரன், பத்மகலாநிதி ஆகியோரின் மாமனாரும் லக்சனி, கலக்சனா, மோகனன், சஜீகா, நக்கீரன், டிசாந்தன் ஆகியோரின் பேரனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (20.12.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*இளவாலை, மாரீசன்கூடல்.* (63573)
பவளேந்திரன் (பவளம்-மகன்).

# மரண அறிவித்தல்

## செல்லையா வீரசிங்கம்



(முன்னாள் முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம், திருநெல்வேலி)

யாழ்ப்பாணம், நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா வீரசிங்கம் 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சௌந்திரம் தம்பதியரின் அன்பு மகனும் இராசமணியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன்(ஜேர்மனி), விமலரதி, நித்தியகலா, ஸ்ரீதரன் (ஸ்ரீடிஜிற்றல் கலர் லாப், ஸ்ரீ அமலா நகை மாடம், யாழ்ப்பாணம்),விஜயகுமாரி, ரவீந்திரகுமார்(சுப்பஸோ டிஜிற்றல் கலர் லாப் கொழும்பு, யாழ்ப்பாணம்), ஜெயசீலன் (சானுகா நடைமாடம், யாழ்ப்பாணம்), ஸ்ரீ சக்திவேல்(ஸ்ரீ மீனாட்சி தங்க மாளிகை), நிகிலா,உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலா(ஜேர்மனி), சண்முகலிங்கம்(பூரணி நகை மாடம், யாழ்ப்பாணம்), சுரேந்திரன்(டுபாய்), மைதிலி(கொழும்பு), சத்யரூபன்(ஸ்ரீ நதியா நகை மாடம், யாழ்ப்பாணம்), அனுசியா(கொழும்பு), சத்யபிரியா(பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), கிருஸ்ணமோகன்(பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனும் திருசாந்தன்,நிரோசன், ஸ்ரீநதியா, சானுகா, கஜலக்ஷன், கஜகனிஷன், மீனுஷா, மீனலக்ஷன், ஸ்ரீராம், கரிணி, சுபசிரவீன், திருஷாயினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.12.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*[illegible], நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* (சி-51607)
**வீ.ஜெயசீலன்(மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடங்கிப்போன அமைதிப்பேச்சுகள்:

# இணைத்தலைமை நாடுகள் விரைவில் கூடி ஆலோசிப்பர்

கொழும்பு,டிசெ.20

இலங்கையில் தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் விரைவில் கூடவுள்ளனர்.

இந்தப் பேச்சுகளில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம், ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாசி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவால் எதிர்கால சமாதானப் பேச்சுகளில் ஏற்படும் தாக்கம் என்பவை தொடர்பாகவும் இப்பேச்சின்போது ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் அதிகரித்துச் செல்லும் வன்முறைகள், மோதல்களால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றமை போன்றவை குறித்து இலங்கையில் உள்ள இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் தொடர்ச்சியாகக் கூடி ஆராய்ந்து வருவதாக அமெரிக்க தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (202)

# 'யுனிசெப்' உதவியுடன் கற்றல் உபகரணங்கள் எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.20

குடாநாட்டு மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் கொழும்பிலிருந்து எடுத்துவர யாழ். அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டுப் பாடசாலைகளின் புதிய கல்வியாண்டு இன்னும் 11 தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, தட்டுப்பாடாகவுள்ள பாடசாலை உபகரணங்களைக் கொழும்பிலிருந்து தருவிப்பதற்கு 'யுனிசெப்'பின் உதவி கோரப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார் - என்றார்.

இதேவேளை -

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்களை எடுத்துவருவது குறித்து எந்தவித உத்தியோகபூர்வ அறிவித்தலும் இதுவரை எமது திணைக்களத்திற்குக் கிடைக்கவில்லை.

வட பகுதியில் உள்ள வவுனியா, மன்னார் பிரதேசங்களின் பாடசாலைகளுக்கும் கிழக்கு மாகாணத்தில் சில பாடசாலைகளுக்கும் பாடப்புத்தக விநியோகம் இதுவரை இடம்பெறவில்லை - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-88)

# உடல் வலுக் குன்றினாலும் உணர்வு குன்றாமல் தமிழர்களுக்காக உரிமைக்குரல் எழுப்பிய உத்தமர்

## மதியுரைஞருக்கு பல்கலை. மாணவர் ஒன்றியம் அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ.20

உடல் வலுக்குன்றிய போதும் உள வலுவும் உணர்வுப் பலமும் குன்றாது உரிமைக்காகக் குரல் கொடுத்த உத்தமரைக் கொடிய நோய் காவுகொண்ட செய்தி தமிழ் மக்கள் அனைவரதும் மனதை நெகிழவைத்து நிற்கின்றது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களுடைய அபிலாசைக்கான நியாயப் போரிலே வரலாற்று திருப்பம் ஒன்றை எதிர்பார்த்திருக்கும் வேளையில், ஏற்க முடியாத, ஈடுசெய்யமுடியாத இழப்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்களுடைய பல தசாப்த கால அமைதி வழி மற்றும் ஆயுத வழிப் போராட்டத்தை ஆழ உணர்ந்தவராக அப் போராட்டத்துக்கான ஆலோசனைகளையும் நியாயப்பாடுகளையும் ஆத்மார்த்த ரீதியாக வெளிப்படுத்திய ஒருவரே அமரர் அன்ரன் பாலசிங்கம்.

தமிழ் மக்கள் சமாதான வழியிலே, அரசியல் நாகரிக வழியிலே உலக - கால நீரோட்டத்துக்கு இசைவாக தமது விடுதலைக்கான தீர்வைப்பெற முன்னிற்கும் வேளைகளில் எல்லாம் அதற்காக தலைமையேற்று தனது சாணக்கியத் திறனால் தளம் அமைத்துக் கொடுத்தவர் அன்ரன் பாலசிங்கம். இதனை கடந்த காலங்களில் நடைபெற்ற சமாதானப் பேச்சுகள் சான்று பகருகின்றன.

அமரர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தனது ஆயுளின் இறுதி நாள்களில் உலகம் வரவேற்கும் ''சமஷ்டி'' எனும் சமாதானத் தீர்வு மூலமாக தமிழ் மக்களுக்கான நியாயங்களைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதிலே அசையாத நம்பிக்கை கொண்டவராகச் செயற்பட்டதை மறக்கவே முடியாது.

எமது போராட்டத்துக்கான தலைமையின் ஆத்ம சகாவாகவும் ஆலோசனை வழங்குநராகவும் ஆரம்பம் தொட்டு செயற்பட்ட தேசத்தின் குரலான அன்ரன் பாலசிங்கம் அவர்களது மறைவுக்கு எமது மாணவர்கள் சார்பில் அஞ்சலிகளைத் தெரிவித்து நிற்கின்றோம் - என்று கூறப்பட்டுள்ளது.

**யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம்**

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களது மறைவு குறித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது. தமிழ் மீதும் தமிழ் பேசும் மக்கள் மீதும் அக்கறையினையும் மித வாத அரசியல் பாங்கினையும் கொண்ட காலா நிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் இழப்பு தமிழ்பேசும் மக்களிற்குப் பேரிழப்பாகும். அவரது இறப்பின் துயர்பகிர்கின்றோம்.

## பண்டத்தரிப்பு புதிய பிரசவ விடுதி வெள்ளி முதல் இயங்குகிறது

வலி.தென்மேற்கு,டிசெ.20

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயங்காத நிலையில் இருந்து வந்த பிரசவ விடுதியும் பிரசவ வார்ட்டும் கடந்த வெள்ளிக்கிழமைமுதல் செயற்பட ஆரம்பித்துள் ளது.

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேற்கொண்ட நடவடிக்கையினால் இவ் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் திருத்தேவி திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இதேவேளை - இதுவரை செயற்படாமல் இருந்து வரும் ஆண் - பெண் வார்ட்டுகளும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் திறந்து இயங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-135)

# பாடசாலை மாணவர்களிடம் பஸ்கட்டணம் அறவிட முடிவு

## அடுத்தமாதம் தொடக்கம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.20

அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் பாடசாலை மாணவர்களி டம் மீண்டும் பஸ் கட்டணம் அறவிடப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் (வடக்கு) செ.கமலநாதன் தெரிவித்தார்.

மத்திய போக்குவரத்து அமைச்சரின் தீர்மானத்துக்கு அமையவே பாடசாலை மாணவர்களிடம் கட்டணம் அறவிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைக்கு அண்மையிலுள்ள டிப்போக்களில் வகுப்பு ரீதியாக மாணவர்களின் விவரங்களைப் பதிவுசெய்யுமாறு செயலாற்று முகாமையாளர் கேட்டுள்ளார். (1-202)

## யாழ். நகர பஸ் நிலையப்பகுதியில்

# மினிபஸ்கள் 5 நிமிடங்கள் தரித்து பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். நகரில் இருந்து பயணிகளை ஏற்றிச்செல்லும் தனியார் பஸ்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்தின் கிழக்குப் பகுதியில் 5 நிமிடம் தரித்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ்சேவைச் சங்கத்தினருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே நடந்த கலந்துரையாடலில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

யாழ். மத்திய பஸ் நிலையம், தனியார் மினிபஸ் தரிப்பிடம் என்பன அண்மையில் பண்ணைப் பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தன.

எனினும், அப்பகுதியில் உள்ள இட நெருக்கடி காரணமாக அங்கிருந்து தம்மால் சேவையில் ஈடுபடமுடியாதென இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் சேவைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனையடுத்து யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதியில் ஒரே நேரத்தில் ஏழு போக்குவரத்துச் சபை பஸ்கள் தரித்து நின்று சேவையில் ஈடுபட இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து தனியார் பஸ் சேவையினரும் பகிஷ்கரிப்பில் ஈடுபட முடிவு செய்தனர். எனினும் அதற்கு முன்பாக தனியார் பஸ்களும் பஸ் நிலையப் பகுதியில் தரித்துச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைப் பகுதியில் தரித்து நிற்கும் மினிபஸ்கள் தமது நேர அட்டவணையின் படி அங்கிருந்து புறப்பட்டு வந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தில் 5 நிமிடங்கள் தரித்து நின்று பிரயாணிகளை ஏற்றிச்செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நோயாளிகள் வசதி கருதி 5 முதல் 7 ஆட்டோக்கள்வரை தரித்து நிற்பதற்கும் சிவில் நிர்வாக அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். (அ-8-88)

## ரி.டி.எம். தட்டுப்பாடு: விவசாயிகள் கவலை

வலி.தென்மேற்கு,டிசெ.20

காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு கதிர்விட ஆரம்பித்துள்ள இந்நிலையில் ரி.டி.எம். உரம் கிடைக்காததால் விவசாயிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

நெற்பயிர்கள் கதிர் வர ஆரம்பிக்கும் (குடலை கக்கும்) போது ரி.டி.எம். உரம் பயன்படுத்தப்படவேண்டும். ஆனால், தற்போது கதிர்வர ஆரம்பித்துள்ள நிலையில், இந்த உரம் கிடைக்கவில்லை. இந்த உரத்தை விவசாயிகளுக்கு விரைவில் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (202-13)

# யாழ். பல்கலைக்கழக கல்வி செயற்பாடுகள் அடுத்தமாதம்

## தங்குமிட வசதிக்கான முன் முயற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை அடுத்தமாதம் முதல் முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

சுயமாக வதிவிட ஒழுங்குகள் செய்துகொள்ள முடியாத வெளிமாவட்ட மாணவர்களுக்கும், வடமராட்சி, தென்மராட்சியின் சில பகுதிகளினதும் தீவகத்தினதும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக விடுதிகளிலும் வேறு இடங்களிலும் தங்குமிட வசதி செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமக்கு வதிவிட வசதி தேவைப்படின் இன்று புதன்கிழமைக்கு முன்னர் தத்தமது பீட உதவிப் பதிவாளருக்கு தொலைபேசி, தொலைநகல் மூலம் தெரியப்படுத்துமாறும் பதிவாளர் கேட்டுள்ளார். (202)

# சிறுவர் தினத்தை ஒட்டிய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு நாளை பரிசளிப்பு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நாளை மு.ப. 10 மணிக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் சான்றிதழ்கள் வழங்கப்படுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**கட்டுரை**

கனிஷ்ட பிரிவு: சி.பானுகா - மீசாலை வீரசிங்கம் ம.வி., த.லதீசனா - மீசாலை வீரசிங்கம் ம.வி., சி.பவித்திரா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சிரேஷ்ட பிரிவு கு.காண்டீபன் - மட்டுவில் ம.வி., கு.சர்மிலன் - சாவகச்சேரி டிறிபேர்க், ரா.அனற்சந்திரா - சாவகச்சேரி டிறிபேர்க்.

**பேச்சு**

த.சோபிதன் - சாவகச்சேரி இந்து ... தன் - மட்டுவில் சரஸ்வதி வித்தி., வி.தாட்சாயினி - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மோ.ரதீஸா - மீசாலை வீரசிங்கம் ம.வி.

## வாசகர் திருமுகம்

### இனப்பிரச்சினைக்கு இப்படியும் ஒரு தீர்விருக்கிறதே!

''வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைக்க வேண்டுமாயின் கிழக்கு மாகாண மக்கள்தான் தாம் வடமாகாணத்துடன் இணைந்து வாழவேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டும்'' என ஜனாதிபதி இந்தியாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

''புலிகளை ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்பதைத் தமிழ்மக்கள்தான் தீரமானிக்க வேண்டும்'' என்ற ரீதியில் பிரதமர் வியட்நாமில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மக்களையும், மக்கள் ஜனநாயகத்தையும் மதிக்கும் கொழும்பு அரசு வடக்கு - கிழக்கு மக்கள் புலிகள் தலைமையை ஏற்று தனிநாடாகப் பிரிந்து சென்று வாழவிரும்புகிறார்களா இல்லையா என்பதையும் தேர்தல் மூலம் இம்மக்களிடமே தீர்மானிக்கும் உரிமையை வழங்கலாமே. அதனை வடக்கு - கிழக்கு மக்கள் மிகவும் விருப்புடன் வரவேற்பார்கள். அத்துடன், பிரச்சினைக்கும் இலகுவாகத் தீர்வு கிடைத்துவிடும். இதற்கு சர்வதேசமும் உதவவேண்டும்.

யாழ்ப்பாணம். க.ஜெயகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தேசத்தின் குரல்’

## கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு

## எம் இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்



தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்
யாழ். மாவட்டம்.

(63553)

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவு

மண்ணகம்
20
*
03
*
1921



விண்ணகம்
21
*
11
*
2006

### திருமதி சதாசிவம் செல்லாச்சிப்பிள்ளை

மண்ணகத்தில் எம்மைவிட்டு
விண்ணகத்திற்கு எம் தந்தையிடம்
சென்றுவிட்ட தாயே
நின் ஆத்மா சாந்திபெற
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் திருமதி சதாசிவம் - செல்லாச்சிப்பிள்ளை அவர்கள் சிவபதம் எய்திய 31 ஆம் நாள் நினைவு கூரலும் ஆராதனையும் மதியபோசனமும் அன்னாரது இல்லத்தில் நாளை (21.12.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- பிள்ளைகள்.

தகவல்: த.இராமநாதன்,
மு.இராமநாதன், வி.கோபாலகிருஸ்ணன்,
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.

(58200)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் பாலசுப்பிரமணியம்



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மாரீசங்கூடல், இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் பாலசுப்பிரமணியம் (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் பாலசுப்பிரமணியத்தின் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், ப.நோ.கூ.ச. - பண்டத்தரிப்பு) அன்பு மனைவியும் யாசோதா (கிராமிய வங்கி-பண்டத்தரிப்பு), விஜிதா (ஆசிரியை, கிளி/ பூநகரி நல்லூர் ம.வி.) தேவதர்சன் (கனடா), கஜிபா (கல்வியியற் கல்லூரி, றுகுண) ஆகியோரின் பாசமிகு தாயும் சக்திவேலின் அன்பு மாமியும் கிருஜிகனின் பேர்த்தியும் சிவபாதம் (விசுவமடு), சரஸ்வதி (விசுவமடு), சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சிவலிங்கம் (இடைக்காடு), சிவகுமார்(இடைக்காடு), சிவயோகம் (இடைக்காடு) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2006) வியாழக்கிழமை நண்பகல் மாரீசன்கூடல் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாரீசன்கூடல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம் (கணவர்).

மாரீசன்கூடல்,
இளவாலை.

(58185)

## மீள் கேள்வி அறிவித்தல்-2007

### யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்-2007

கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக) - ரூபா 300/=

கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி - 18.12.2006 தொடக்கம் 22.12.2006 வரை

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளும் திகதி - 22.12.2006 பிற்பகல் 2.30 மணிவரை.

கேள்விகள் திறக்கும் திகதி - 26.12.2006 முற்பகல் 11 மணிக்கு

குத்தகைக் காலம் - 01.01.2007 தொடக்கம் 31.12.2007 வரை.

குறிப்பு:- மேலதிக விவரங்களை யாழ்.மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரம் 16.11.2006 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் நிபந்தனைகள் யாவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| தொ. இல. | பொதுச் சந்தைகள் | படிவக் கட்டணம் (வற் வரி) நீங்கலாக | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | 2007 |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை | 300.00 | 1000.00 | 1867800.00 |
| 02. | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 300.00 | 1000.00 | 635690.00 |
| 03. | செங்குந்தா சந்தை | 300.00 | 1000.00 | 586234.00 |
| 04. | குருநகர் சந்தை | 300.00 | 1000.00 | 1036970.00 |
| 05. | நாவாந்துறை சந்தை | 300.00 | 1000.00 | 316800.00 |
| 06. | பாசையூர் சந்தை | 300.00 | 2500.00 | 47500.00 |
| 07. | அரியாலைச் சந்தை | 300.00 | 2500.00 | 77001.00 |
| 08. | புங்கங்குளம் சந்தை | 300.00 | 1000.00 | 3300.00 |
| 09. | கொழும்புத்துறை சந்தை | 300.00 | 1000.00 | 16500.00 |
| 10. | வீதியோர வாகனத் தரிப்பிடம் | 300.00 | 3000.00 | 400000.00 |
| 11. | நடைபாதை வியாபாரிகள் சந்தை | 300.00 | 3000.00 | 1416000.00 |

| தொ. இல. | இறைச்சிக்கடைகள் | படிவக் கட்டணம் (வற்வரி) நீங்கலாக | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | 2007 |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.01 | 300.00 | 2500.00 | 79200.00 |
| 02. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.03 | 300.00 | 2500.00 | 88145.00 |
| 03. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.05 | 300.00 | 2500.00 | 45100.00 |
| 04. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை இல.06 | 300.00 | 2500.00 | 45749.00 |
| 05. | பண்ணை கோழிக்கடை இல.7 | 300.00 | 2500.00 | 42625.00 |
| 06. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை இல.1 | 300.00 | 2500.00 | 185750.00 |
| 07. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 300.00 | 2500.00 | 36000.00 |
| 08. | புங்கங்குளம் மாட்டிறைச்சிக்கடை இல.1 | 300.00 | 2500.00 | 170500.00 |
| 09. | புங்கங்குளம் ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 300.00 | 2500.00 | 40400.00 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.2 | 300.00 | 2500.00 | 113000.00 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.3 | 300.00 | 2500.00 | 71500.00 |
| 12. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.4 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 13. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.5 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 14. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.6 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 15. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.7 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.8 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 17. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.9 | 300.00 | 2500.00 | 66000.00 |
| 18. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல.10 | 300.00 | 2500.00 | 10000.00 |
| 19. | நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.11 | 300.00 | 1000.00 | 10000.00 |
| 20. | நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.12 | 300.00 | 1000.00 | 10000.00 |
| 21. | நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை இல.1 | 300.00 | 5000.00 | 275000.00 |
| 22. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை இல.2 | 300.00 | 2500.00 | 111700.00 |
| 23. | [illegible] ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 300.00 | 2500.00 | 31570.00 |

15.12.2006 மு.செ.சரவணபவ, மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

H.N.D.A. (2003) பழைய மாணவியும் கிளி/ பூநகரி நல்லூர் ம.வித்தியாலய ஆசிரியுமான செல்வி விஜிதா பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புத் தாய்

அமரர் மாணிக்கம் பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

H.N.D.A. (2005)
மாலை நேர மாணவர்கள்.

(63556)

## மரண அறிவித்தல்

### திருமதி சூசைப்பிள்ளை அக்னெஸ்



பிடாரி கோயிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை அக்னெஸ் அவர்கள் 18.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும் விக்டோறியா,தேவயோகம், யேசுதாசன் (ஜேர்மனி), சௌந்தரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் இராஜதுரை (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), றெஜினோல்ட் (இலங்கை வங்கி, மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்), சுவேந்தினி (ஜேர்மனி), அமுதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் யோசப், கீதாஞ்சலி (சுவிஸ்), யூட்றிக், புஸ்பாஞ்சலி (இத்தாலி), சுரேஸ்குமார் (லண்டன்), மதிவதனன் (ஆசிரியர், பலாலி ஆசிரியர் கலாசாலை), ஷிபாணி (இலங்கை வங்கி, 2ஆம் கிளை யாழ்.), நிஷாணி, சனுக்கா (ஜேர்மனி), சேனுக்கா (ஜேர்மனி), சௌமியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜென்சி(சுவிஸ்)யின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.12.2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலிக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கத்துக்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.அ.றெஜினோல்ட் (மருமகன்)
இலங்கை வங்கி மேற்தரக் கிளை
யாழ்ப்பாணம்.

பிடாரி கோயிலடி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
T.P.:222 9107

(59684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'தேசத்தின் குரல்'

## கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு

## எம் இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

### அண்ணன் பாலாவுக்கு என் சிறிய காணிக்கை

மதியுரைஞரே மதியுகத்தின் தனையனே
தேசத்தின் குரலே தமிழினத்தின் மதியே
உன் பிரிவு தாங்காமல்
பூலோக தமிழினம் அழுகுதையா
வேகுதையா
கண்ணீர் மழை பெருக்கெடுத்தது
தமிழர் தாயகத்தில்
உனை இழந்து ஓடுதையா
தூங்கு முன்னே உன் ஞாபகங்கள்
தட்டி எழுப்புகிறது தமிழர் எம்மை
தமிழினத்தின் விடியலுக்காய்
தலைவனுடன் நீ இருந்து
தலைமகனாய் தமிழ் மகனாய்
எம் உறவில் நீ ஒருவன்
அரசியலை உனதாக்கி
அலையுலகில் முகிழ்ந்தவனே
உனக்கு நிகர் யாருளரோ
அரசியல் கொடியில் பூத்த
தமிழ்ப் பூவே!
இன்று கொடிய நோய்ப்பட்டு
உதிர்ந்து போனதேனோ
ஆலம் வித்தினில் அவதரித்து
விருட்சமென விழுதெறிந்து
எம்படை நிற்கையிலே
விதையாகி போனாயே எம் குரலே
தேசத்தின் குரலே
அரசியல் மலையே
விடியலுக்காய்
விடுதலைப் புலியானாய்
அடக்கு முறைக்காய் பூவுலகில்
குரல்கொடுத்தாய்
விடியலை காணுமுன்னே
இரவுடன் போய் மறைந்தாய்
மோட்ச வீட்டில் மாவீர
தெய்வங்கள் உனைப்பார்த்து
அகமகிழ்வர் ஒரு கணம்
கலங்கி நிற்பர் மறுகணம்
இரண்டும் ஒரு கணமாய்
அரசியல் பாடம் புகட்டுவாய் நீ அண்ணா
தேசத்தின் குரலே பாலாவே
சாவை நீ அழைத்து
சரித்திரமாய் போய்விட்டாய்
நின் பிரிவு தாங்காமல்
கதறுகின்றோம் பதறுகின்றோம்
பாலா அண்ணாவே தமிழரெல்லாம்
தேசத்தின் குரலை எண்ணி.

**- தமிழ் மாணவர் சமூகம் -**

(63553)

# கண்ணீர் அஞ்சலி



எமது இல்லத்தின் நிர்வாகி சிறிதரன் அவர்களின் தந்தை

## செல்லையா வீரசிங்கம்

அவர்கள் மரணமான செய்தி அறிந்து அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளோம். அன்னாரின் மறைவினால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சிறுவர்கள், பணியாளர்கள்,**
**தாயகம் சிறுவர் இல்லம்.**

எமது நிறுவனங்களின் உரிமையாளரான வீ.சிறிதரன் அவர்களின் பாசமிகு தந்தை

## செல்லையா வீரசிங்கம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு, அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர்கள்,**
**கொனிக்கா கலர் லாப் அன்ட் சிறி டிஜிட்டல் கலர் லாப்.**

எமது நிறுவனங்களின் உரிமையாளரான வீ.சிறிதரன்
அவர்களின் அன்புத் தந்தை

## செல்லையா வீரசிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு கவலை அடைகின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர்கள்,**
**சிறீ அமலா அன்ட் [illegible]**

(சி/51601)

### சிக்குன் குனியா மருத்துவ முகாம்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடத்தும் சிக்குன் குனியா இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக செயலகத்தில் நடைபெறவுள்ளது.
(202)

### சுயதொழில் வாய்ப்புக்கு கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமூக நலத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சுயதொழில் வாய்ப்புக்கான நிதி பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதற்கட்டக் கொடுப்பனவு எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சமூக சேவைகள் மற்றும் நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்படவுள்ளன.

பிரதேசத்தில் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளையும் அன்றைய தினம் காலை 9 மணிக்கு அமைச்சு அலுவலகத்திற்கு செல்லுமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி திலகவதி

வட கோப்பாய், வராம்பற்றையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி திலகவதி அவர்கள் 18.12.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் பொன்னம்பலம் கந்தசாமியின் அன்பு மனைவியும் பார்வதியம்மை, சபாபதிப்பிள்ளை, இராஜேஸ்வரி, தில்லையம்மை, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகாம்பிகை, பிரபாகரன் (சுவிஸ்), கருணாகரன், காலஞ்சென்ற மீனாம்பிகை, கிருபாகரன், ஸ்ரீதரன், லலிதாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காசிலிங்கம், றோகினி (சுவிஸ்), ராணி, சாந்தி, செல்வி, லவன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2006) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு வடகோப்பாய், இலுப்பையடிப்பிள்ளையார் கோவிலடி என்னும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய், இளங்காட்டு இந்துமயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதர் மடம்,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(59699)

தகவல்:
**கருணாகரன்**
(மகன்).

## கந்தையா அன்னப்பிள்ளை



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அன்னப்பிள்ளை 19.12.2006 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கமலாதேவி (சரவணை), கருணாநிதி (கொழும்பு), இராசேஸ்வரி (பிரான்ஸ்), அமரர் சுப்பிரமணியம், தருமகுலசிங்கம் (ஜேர்மனி), வரதராசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் சுப்பிரமணியம், பொன்னுத்துரை (கொழும்பு), அழகியநாதன் (பிரான்ஸ்), வனசா (கொழும்பு), தாரணிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா, வைத்திலிங்கம், கதிரவேலு, சின்னத்துரை ஆகியோரின் அன்பு அண்ணியும் அமரர் மனோன்மணி, அன்னலட்சுமி (பிரான்ஸ்), மகேஸ்வரி (கொழும்பு), இந்திராணி (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் காலஞ்சென்ற துரையப்பா, பொன்னுத்துரை (கொழும்பு) காலஞ்சென்ற நாகம்மாவின்(மட்டுவில்) அன்புச் சகோதரியும் பரிமளம், மங்களம், காலஞ்சென்ற பேரம்பலம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20.12.2006) புதன்கிழமை பி.ப 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சரவணை புண்ணங்கண்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சுப்பிரமணியம் கமலாதேவி** (மகள்),
**விஜயராசா** (விஜயன் -பேரன்).

(63557)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில்
## ஈருருளி வண்டிகளுக்கு பாதுகாப்புச் சேவை

தற்போது துர்காபுரம் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில் இயங்கிவரும் மேற்படி வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர், பார்வையாளர் ஆகியோரின் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்க (தனிநபர், பொதுஸ்தானங்கள்) விருப்பமுள்ளவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பத்திற்கும் மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி : 27.12.2006
நண்பகல் : 12 மணி

சு. ஏழூர்நாயகம்,
தலைவர்.

சோ. இராசேந்திரன்
செயலாளர்.

மாவட்ட வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

(59659)

## மறைந்தும் மறவாத நினைவலைகள்

1ஆம் ஆண்டு நிறைவில் | 3ஆம் ஆண்டைநோக்கி




திரு. முருகேசபிள்ளை ஒப்பிலாமணி
[முன்னாள் தலைவர்
யாழ். மாவட்ட கிராமசேவையாளர் சங்கம்]
அமாவாசைத்திதி
மலர்வு 19.10.1929 உதிர்வு 30.12.2005

திருமதி
புவனேஸ்வரி ஒப்பிலாமணி
அமரபக்க திரயோதசித் திதி
மலர்வு 07.01.1932 உதிர்வு 18.03.2004

அம்மையை இழந்த அந்நாளில்
அழுதோம்! என்னொடும் சேர்ந்தழுத
அப்பரும் அன்னை முகம் காண
அமரர் ஆகிடத் தவித்தழுதேன்!
அன்னை மறைந்த மூன்றாண்டும்
அப்பர் பிரிந்த முதலாண்டும்
ஒன்றாக நெருங்கி வரும் நாளில்
அம்மை அப்பரைத் துதிக்கின்றேன்.

556, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் இரத்தினம் விஜயரெத்தினம்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)

இலங்கை வங்கியில் பிறமாவட்டங்களில் கடமையாற்றி, யாழ். மாவட்டத்தில் மானிப்பாய், யாழ். 2ஆம் கிளை, ஊர்காவற்றுறை, மாவட்டக் காரியாலயம் ஆகிய கிளைகளில் பணியாற்றியவரும் எமது கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினருமாகிய **அமரர் இரத்தினம் விஜயரெத்தினத்துக்கு** கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்.

அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

BOC

யாழ். மாவட்ட இலங்கை வங்கி ஊழியர்,
விளையாட்டு, நலன்புரி இலக்கிய அமைப்பு.
(அ/51598)

## கண்ணீர் அஞ்சலி



### இரத்தினம் விஜயரெத்தினம்
(இலங்கை வங்கியின் முன்னாள் கிளை முகாமையாளர்)

வண்ணை, சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் தர்ம பரிபாலன சபை பொருளாளரும், அக்கோயிலின் சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் தலைவருமாகிய

**அமரர். இ. விஜயரெத்தினம்**

அவர்களின் திடீர் மறைவை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் இழப்பால் அல்லலுறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய விநாயகனை வேண்டுகின்றோம்.

366, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ணை. சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக
விநாயகர் கோயில் தர்மபரிபாலன சபையினர்,
சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர்.
(59661)

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்
சங்க கனடாக் கிளையின் செயலாளர்
மு. விஜயகுமார் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி முத்துக்குமாரு கண்மணியம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளை, கொக்குவில்.
(59654)

### கல்வியியல் கல்லூரியில் சம்பளம் வழங்கல்

யாழ். தேசிய கல்வி யற் கல்லூரி விரிவுரை யாளர்கள் கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோர் களுக்கான மார்கழி மாத வேதனமும் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப் பட வுள்ளன.

நாளை மறுதினம் காலை 9 மணிக்கு விரி வுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான வேதனம் கல்லூரியில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளை மூலம் வழங்கப்படவுள்ளது. உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களில் இது வரை மாதாந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை பெறலாம் என கல்லூரியின் உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

(202)

### தென்மராட்சியில் மனையியல் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மனையியல் பாடஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை நுணாவில்கிழக்குஅம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனங்களின் உரிமையாளரான
**வீ.ரவீந்திரகுமார்** அவர்களின் அன்புத் தந்தை

## செல்லையா வீரசிங்கம்

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த கவலை அடைகின்றோம்.
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர்கள்;**
**சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்,**
**ரவி டிஜிற்றல் கலர் லாப்,**
**சுப்பலோ ஸ்ருடியோ,**
**சுப்பலோ கலர் லாப் (கொழும்பு).**
(51604)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர் வீ.ஸ்ரீசக்திவேல் (ஸ்ரீவாணி நகை மாளிகை) வீ.ஜெயசீலன் (சாணுகா நகை மாளிகை) வீ.ரவீந்திரகுமார் (சுப்பலோ ஓடியோ வீடியோ அன் கலர் லாப்) ஆகியோரின் தந்தை

### செல்லையா வீரசிங்கம்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் எமது கழக உறுப்பினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர் ச.சுப்பையாவின் பாசமிகு தாய்

**திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி நகர சபை
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**

தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.

உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.

(சி/50463)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் A/L, B.A, B.F.A, M.A, M.B.B.S, B.S.M.S, B.Sc, M.Sc, B.Com, M.B.A பட்டதாரிகள், அரச பணி வகிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு, மணப்பெண்களுக்கு தகுதியான உள்நாட்டு, வெளி நாட்டு மணமகன்கள் தேவை. தொடர்புக்கு.

சிவாலயா சர்வதேச திருமண நிலையம்,
இல.389, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, (பூங்கனிச்சோலை எதிரில்),
யாழ்ப்பாணம்.

## கொழும்பு - யாழ். - யாழ். - கொழும்பு விமானசேவை

தொடர்பு: : 078 - 6059885, 0777 - 733662, 021 222 3143, 021 222 2874.

## அறிவித்தல்

எமது குடும்பத்தலைவர் அமரர் இ.தேவமனோகரன் (மனோ அண்ணை) அவர்களிடம் திருத்துவதற்காக கொடுத்த புகைப்படக்கருவிகள் அனைத்தையும் தகுந்த அடையாளங்களுடன் வந்து 24.12.2006 ஞாயிற்றுக்கிழமை அன்று பெற்றுக்கொள் [illegible] அவை [illegible] கேட்டுக்கொள்கிறோம்.

தொல்புரம். (59666) -மனைவி

## கண்ணீர் அஞ்சலி

### செல்லையா வீரசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஸ்ரீபோ நிவிக் நிர்வாகியும் சக ஊழியர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



### அமரர் செல்வவிநாயகம் தவமணி

தோற்றம் 02.10.1946 மறைவு 21.11.2006

கடந்த 21.11.2006 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்பு அன்னை செல்வவிநாயகம் தவமணி அவர்களது 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.12.2006) புதன்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

பூணாவளைத் தோட்டம்,
கரணவாய், கரவெட்டி.
(55904)
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 14 ★ 08 ★ 1942



விண்ணில் 20 ★ 11 ★ 2006

### திருமதி மனோன்மணி துரைராஜா

"காலையில் கண் விழித்து கதைத்த ஆருயிர் அம்மாவே!
காலனிடம் கணப்பொழுதில் உங்கள் உயிரைப் பறிகொடுத்து
-பரிதவிக்கின்றோம்".

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்டு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (20.12.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.
(59667)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# ஈழத்தமிழர்கள் கருணாநிதியிடம் அறிய விரும்பும் பதில்கள்

சேர, சோழ பாண்டிய மன்னர்களின் வழித்தோன்றல்களான ஈழத் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்து, அவர்களைப் பாதுகாப்பது தமிழகத்தின் பொறுப்பு. அதிலிருந்து நாம் விலகமாட்டோம்.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி சென்னையில் கடந்த ஞாயிறன்று நடந்த நிகழ்வு ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

சுமார் ஐந்து வாரங்களுக்கு முன்னர் -

*இலங்கைத் தமிழர் விடயத்தில் இன்னும் எவ்வளவு காலத்துக் குப் பொறுமை காப்பது என்ற நியாயமான கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது* - என்று அவர் கூறியிருந்தார்.

வாகரையில், நவம்பர் மாதம் எட்டாம் திகதி அகதிகள் ஐம்பது பேர் - தமிழர்கள் ஐம்பது பேர்- அரசாங்கப் படைகள் நடத்திய எறிகணைத் தாக்குதலில் கோரமாகக் கொலையுண்டனர்.

கதிரவெளிப் பகுதியில் அகதிகள் தங்கியிருந்த பாடசாலையைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அனாதரவான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

நிராயுதபாணிகளான தமிழர்களைக் கொன்றுவிட்டு, கொலை செய்யப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் என்றும், அவர்கள் நடத்திய தாக்குதல்களுக்கான பதில் தாக்குதலிலேயே மக்கள் மரணமானார்கள் என்றும் புரட்டும் புனைகதையும் கூறுவதே இலங்கை அரசாங்கத்தின் வழமை.

அந்த வரிசையில் -

வாகரைப் படுகொலையிலும், விடுதலைப் புலிகள் அகதிகளைக் கேடயமாக பயன்படுத்தியதாலேயே இந்தப் படுகொலைகள் நடைபெற்றன என்று அரசு கூறிய பொய்யை சர்வதேச சமூகம் நம்பவில்லை; ஏற்கவில்லை. அதனால் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் என்பன இலங்கை அரசைக் கண்டித்ததோடு கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்திருந்தன.

இலங்கை அரசின் மனிதப் படுகொலைகளை உலக நாடுகள் கண்டித்த வேளையிலேயே கருணாநிதியின் கண்ணீர் மொழியும் சேர்ந்து கொண்டது.

கடந்த மாதம் 12ஆம் திகதியன்று உதயன் தனது ஆசிரியர் தலையங்கத்தில் கருணாநிதியின் கண்ணீர் மொழி போதுமானதல்ல, பொருத்தமானதும் அல்ல என்று சுட்டிக்காட்டி இருந்தது.

ஏனைய நாடுகளைப் போன்று, ஏன் இந்திய மத்திய அரசைப் போன்று, கடமைக்காக - வெறும் சம்பிரதாயத்துக்காக - தமிழகத்தின் முதல்வர் கருணாநிதி ஈழத் தமிழர்களின் கொடுங்கொலை குறித்து அவ்வாறு கருத்துக் கூறுவதை ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கவில்லை; சீரணிக்கவும் இல்லை.

தமிழகத்து மக்களும், ஈழத்தமிழர்களும் இரத்தத்தின் இரத்தங்கள், ஒரு தாய் பிள்ளைகள் போன்று மொழி, கலாசார, பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்களால் ஒன்றிணைக்கப் பட்டவர்கள்.

ஈழத் தமிழர்கள் மீது ஏவப்பட்டுள்ள அழிவுகளுக்கும் அட்டூழியங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் இன ஒழிப்பு நடவடிக்கை களுக்கும் எதிரான உணர்வலைகள் தமிழகத்தில் பொங்கிப் பிரவாகித்து வரும் இந்த வேளையிலும் -

மத்திய அரசை சமாளிப்பதற்காக, அதனைத் தாஜா பண்ணுவதற்காக கருணாநிதி கண்ணீர்ப் புலம்பல் நடத்தியதை இங்குள்ள தமிழ் மக்களால் சீரணிக்க முடியவில்லை; ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஏனைய தலைவர்கள் போன்று ஒப்புக்காக செய்த புலம்பலாகவே அதனை அவர்களால் கணிக்க முடிந்தது.

உலகத் தமிழினத்தின் தலைவர் என்ற பொறுப்புமிக்க நிலையில் நின்று பொங்கிஎழும் பாத்திரமாகி இடித்துரைக்க வேண்டிய கருணாநிதி -

மத்திய அரசிடம் குட்டு வாங்கிவிடக் கூடாதே என்ற மன நெருக்கீட்டுடன் வெளியிட்ட வார்த்தைகள் ஈழத்தமிழர்களை வருத்தமுற வைத்தன. அவரது தயவும், தயக்கமும் ஏமாற்றம் தந்தன.

அதனைப் புரிந்துகொண்டதாலோ என்னவோ, ஈழத்தமிழர்களுக்குத் தமிழீழம் கிடைத்தால் நான்தான் மகிழ்ச்சி அடைவேன் என்று அவர் பின்னர் ஒரு தடவை கூறினார்.

*"சுதந்திரத் தமிழீழம் மலர்ந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். இதனை இப்போது அல்ல, ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னரே நான் தெரிவித்திருக்கின்றேன்.*

*"அதேபோல ஈழத்தமிழர்கள் இத்தகைய படுகொலைகளுக்கு ஆளாகாத வகையில் இரு சாராரும் இணைந்து ஒரு மாற்று ஏற்பாட் டைக் கண்டுபிடித்து, அதில் ஓர் உடன்பாடு ஏற்பட்டு அமைதியை உருவாக்கினால் அதற்கும் மகிழ்ச்சி அடைவேன்"* என்பதே அதுவாகும்.

அந்தக் கூற்று அவரது அரசியல் முதிர்ச்சியினால் வெளிவந்ததா அல்லது வயது முதிர்வினால் உண்டான கடைசிக் கால 'ஆசையா' என்பது தனியாக நோக்கப்படவேண்டிய, விமர்சிக்கப்படவேண்டிய ஒன்றாகும். நிற்க,

அவர் இப்போது முன் வைத்திருக்கும், மொழிந்திருக்கும் கூற்று அர்த்தமுள்ளதாக, ஓரளவு ஆழம் நிறைந்ததாக அமைந்திருக்கின்றது எனக் கொள்ளக்கூடியது.

எனினும் -

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசினதும் தமிழக மாநில அரசினதும் நிலைப்பாடு ஒன்றே என்று வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன் போன்ற அதிகாரிகள் மட்டுமன்றி -

மத்திய அரசின் அமைச்சர்கள் மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் போன்ற தலைவர்களும் அழுத்தி உரத்துக் கூறி வருகிறார்கள்.

இலங்கையின் ஆட்புலம் மற்றும் இறைமையை பாதிக்காத வகையிலான சகல இனத்தவர்களினதும் நியாயமான உரிமைகளை வழங்கும் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் - என்பதே மத்திய அரசின் வாய்ப்பாடமான தேற்றம்.

இதேவேளை-

இலங்கைத் தமிழர்களின் உயிர்களைப் பாதிக்கும் விதத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது என்பதே காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடாகும். இலங்கைத் தமிழர்களின் நலன்கள் குறித்து அதிக அக்கறையுடன் காங்கிரஸ் செயற்படுகின்றது - என்று காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா அண்மையில் கருணாநிதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கருணை பொழிந்து கூறியிருக்கிறார்.

இவற்றில் எந்த நிலைப்பாட்டை தமிழக முதல்வர் என்ற பதவிசால் வகையில் கருணாநிதி ஆதரித்திருக்கிறார் அல்லது இணங்கிப்போகிறார்?

உலகத் தமிழர்களின் தலைவர் என்ற உயர்ந்த பதவியில் நின்று கொண்டு, எதனைச் செய்ய விரும்புகிறார்; செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டைக் கலைஞர் கருணாநிதி கொண்டிருக்கிறார்?

இக்கேள்விகளுக்கான பதில்களை வெளிப்படுத்த வேண்டிய காலத்தின் தேவையும் கடமையும் அவருக்கு உண்டு. அதனையே ஈழத்தமிழர்கள் அறிய விரும்புகிறார்கள்.

## மூவரைக் காணவில்லை என நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.20

குடாநாட்டில் மூவரைக் காணவில்லை என்று மனித உரிமை ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அராலி வீதியில் உள்ள தமது வீட்டில் இருந்து கடந்த 15ஆம் திகதி காலை 8 மணிக்கு சைக்கிளிலில் சாவகச்சேரி சந்தைக்குச் சென்று தேங்காய் வாங்கி வருவதாகக் கூறிச் சென்ற வியாபாரிகளான இருவர் இன்று வரை வீடு திரும்பவில்லையென முறையிடப்பட்டுள்ளது.

நாகநாதி பார்த்தீபன்(வயது 18), நாகநாதன் செந்தூரப்பிரியன் ஆகியோரையே காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

தாவடி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சூரியகுமார் அஜீத்தன்(வயது 20) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை மோட்டார் சைக்கிளில் காலை 10 மணிக்கு கொடிகாமம் சென்று பொருள்களை பெற்றுவருவதாக கூறிச் சென்றவரும் இதுவரை வீடு திரும்பவில்லையெனவும் முறையிடப்பட்டுள்ளது. (1-68)

## மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் உட்பட 3 பேர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

கொழும்பு,டிசெ.20

வவுனியா சாளம்பைக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் தெரியாத நபர்களால் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஒரே வீட்டில் வைத்து இந்த முக்கொலைகளும் புரியப்பட்டுள்ளன. பெண் ஒருவருக்கு இந்த சம்பவத்தில் காயம் ஏற்பட்டிருக்கிறது.

சாளம்பைக்குளம் பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு இரவு 7.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர் வீட்டில் இருந்தோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பித்துச் சென்றனர் என்று காயமடைந்த பெண் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களில் இருவர் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றார்கள். மற்றையவர் வவுனியாவில் வசித்து வருபவர் என்றும் அவர் கிளி நொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மூன்றாவது நபர் அடையாளம் காணப்படவில்லை.

ஒருவர் மட்டக்களப்பு மாவடிவேம்பு சித்தாண்டிப் பகுதியைச் சேர்ந்த அருணாச்சலம் அருள்குமார் என்றும், மற்றையவர் வவுனியாவைச் சேர்ந்த சுலோஜன் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுலோஜன் மதனலோஜினி (வயது - 22) என்ற பெண்ணே காயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு பகுதியில் இருந்து வவுனியாவுக்குவந்த இவர்கள் கூலி வேலை செய்பவர்களா அல்லது தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்களா என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

இந்த மூன்று பேரும் எதற்காக கொலை செய்யப்பட்டார்கள் என்பது தெரியவில்லை.

பொலிஸாரால் மீட்கப்பட்ட மூன்று சடலங்களையும் வவுனியா பொது மருத்துவமனை சவச்சாலையில் வைத்து வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் பார்வையிட்டார். மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார். (ஐ)

## முட்டையின் விலையை பார்வைக்கு வைக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.20

குடாநாட்டிலுள்ள கோழிப் பண்ணை உரிமையாளர்கள் முட்டையின் விலையைப் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தவேண்டும் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோழிப்பண்ணையாளர்களுக்கு அவரவர் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஊடாகத் தற்போது கோழித்தீவனம் கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. இதனால் முட்டை உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆயினும் உயர்ந்து சென்ற முட்டை விலையில் இதுவரை எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. இக்கட்டான இக்கால சூழ்நிலையில் முட்டை விலையைக் குறைப்பது சம்பந்தப்பட்டோரின் கடமையாகும்.

எனவே கோழிப்பண்ணை உரிமையாளர்கள் பண்ணை வாசலில் முட்டையின் விலையை விளம்பரப்படுத்தல் அவசியம்.

பின்பற்றத் தவறும் பண்ணையாளருக்கு அடுத்த கட்ட கோழித்தீவனம் விநியோகம் குறித்து மீள்பரிசீலனை செய்யப்படும் - என்றார். (அ-202)

## மானிப்பாயில் படையினர் மருத்துவ முகாம் நடத்தினர்

யாழ்ப்பாணம்,டிசெ.20

மானிப்பாய் பகுதியிலுள்ள 513 ஆம் கட்டளையிடும் தலைமையகத்தின் கீழ் இயங்கும் படைப்பிரிவிலுள்ள 6 கிராமங்களில் இராணுவ வைத்தியப் பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மருத்துவ முகாம் நடத்தினர். பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் இத்தகவலைத் தெரிவித்தது.

இது தொடர்பாகத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது-

ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சுதுமலை, சாவற்காடு, சண்டிலிப்பாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கென மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது.

மானிப்பாய் பெண்கள் பாடசாலையில் நடத்தப்பட்ட இம்முகாமில் 500 பேர்வரை வைத்திய உதவிகளைப் பெற்றுக்கொண்டனர். ஆயிரம் சமைத்த உணவுப் பார்சல்களும் வழங்கப்பட்டன.

தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின்படி இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்றுள்ளது. (202)

## பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதையே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றார்கள்

கொழும்பு,டிசெ.20

பேச்சுக்கள் மூலம் அமைதியைத் தோற்றுவிக்க முடியும் என்ற கருத்தை வடக்கு - கிழக்கிற்கு வெளியில் வாழும் பெரும்பாலான மக்கள் ஆதரிக்கின்றார்கள்.

மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றில் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

அமைதியைத் தோற்விப்பதற்கான தகுதிகளைக் கொண்டதாகவே அரசாங்கம் விளங்குகின்றது என பெரும் பாலான சிங்களவர்கள் நம்புகின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலமாக அமைதியைத் தோற்றுவிப்பதில் விருப்பம் கொண்டுள்ளார்கள் என்பதை மலையக தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

மேற்படி அமைப்பு 2006 நவம்பர் மாதத்தில் இந்த ஆய்வினை நடத்தியுள்ளது. இந்தக் கருத்துக் கணிப்பில் கலந்துகொண்டவர்களில் அனேகர் அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரிக்கவேண்டும். அவசியமானால் முழு அளவிலான போரை நடத்தவேண்டும் என்பதற்கும் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் சாதாரண மனிதனுக்கு எதுவித நன்மையும் புரியவில்லை. அது செயலிழந்து போய்விட்டது என்று அனேக சிங்கள மக்கள் கருதுகிறார்கள்.

இந்த ஆய்வினில் கலந்துகொண்ட பெரும்பான்மையானவர்களும் இந்தியாவின் தலையீடு நல்ல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்ற கருத்துடையவர்களாகத் தென்படுகிறார்கள்.

இந்த ஆய்வு வடக்கு கிழக்கில் நடத்தப்படவில்லை. (ப)

## சிக்குன்குனியா நோய்த் தடுப்புப் பணிகள் தீவிரம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

சிக்குன் குனியா காய்ச்சலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான பிரசார நடவடிக்கைகளை பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகம் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

சேவாலங்கா மன்றம், யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தின் சுகாதாரப் பரிசோதகர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

'சிக்குன் குனியா' காய்ச்சலைப் பரப்புகின்ற நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான கருத்தரங்குகளும் அரச அலுவலகங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றில் நடத்தப்படுகின்றன.

நுளம்புப் பெருக்கும் அதிகமாகக் காணப்படும் இடங்களில் புகையூட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதற்கென புகையூட்டும் கருவிகள், அதற்கான மருந்துகள் என்பன கப்பலில் எடுத்துவரப்பட்டு சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வலிகாமம் யாழ்ப்பாணம் பகுதிகளில் இந்த நோய்த்தாக்கம் அதிகமாக உள்ளதால் அப்பகுதியில் புகையூட்டும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (1-8)

**நாளை**

மார்கழி 06
வியாழக்கிழமை
21.12.2006
திதி : பிரதமை
முன்னிரவு : 7.59
நட்சத்திரம் : மூலம்
பிற்பகல் : 12.34
சுபநேரம் : 07.54 - 09.24
ராகுகாலம் : 1.54 - 03.24

## குடாநாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை

### பொதுமக்கள் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து சுமூகமான நிலையைத் தோற்றுவிக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். - என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமைச்சின் யாழ். அலுவலகத்துக்கு நேற்று வருகை தந்த பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் தமது தேவைகளை அமைச்சிடம் எடுத்துக் கூறினர்.

குடாநாட்டு மக்கள் தற்போதைய சூழ்நிலையில் முகம்கொடுத்து வருகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அன்றாடம் நேரடியாகவே தான் அறிந்து வருவதாகவும் இம்மக்களது அனைத்துப் பிரச்சினைகளையும் தன்னால் இயன்றவரை தீர்த்துவைப்பதற்காகவே தான் தொடர்ந்தும் யாழ். நகரில் தங்கி இருப்பதாகவும் உடனுக்குடன் தீர்வுகளைக் காணத்தக்க பிரச்சினைகள் அனைத்தும் அவ்வப்போது தீர்க்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் மேலும் சில பிரச்சினைகள் கூடிய விரைவில் தீர்க்கப்பட்டு பொது மக்கள் நல்லதொரு வாழ்க் கையை மேற்கொள்ளக்கூடிய சூழல் விரைவில் ஏற்படுத்தப்படுமென்று நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் தெரிவித்தார். - என்றுள்ளது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளருக்கு 260 ரூபா சம்பளம் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று ஒப்பந்தம்



கொழும்பு, டிசெ. 20

தோட்டத் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு 260 ரூபா சம்பளம் வழங்கும் ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் தொழிற்சங்கங்களுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் கைச்சாத்தானது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம், பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பிரதிநிதி எஸ். ராமநாதன் ஆகியோர் தொழிற்சங்கங்களின் சார்பிலும், முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் லலித் அபேசேகரவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஒப்பந்தத்தின்படி ஒரு தொழிலாளிக்கு அடிப்படைச் சம்பளமாக 170 ரூபாவும், நிரந்தரக் கொடுப்பனவாக 20 ரூபாவும், வேலைக்கு வருகை தரும் அடிப்படையில் 70 ரூபாவும் வழங்கப்படும். இதேவேளை, மேலதிகமாகப் பறிக்கும் ஒரு கிலோ கொழுந்துக்கு ஒன்பது ரூபா விசேட கொடுப்பனவும் வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் றப்பர்த் தோட்டத் தொழிலாளியும் இதே சம்பளத்தைப் பெறுவார். முன்னர் தேயிலைத் தோட்டத் தொழிலாளியை விட றப்பர் தோட்டத் தொழி லாளி குறைந்த சம்பளத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அலரிமாளிகையில் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுட செனிவிரத்ன, பிரதி அமைச்சர் மேர்வின் டிசில்வா, இ.தொ.காவைச் சேர்ந்த பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், எம். புத்திரசிகாமணி எம்.பி., இ.தொ.கா. பிரதித்தலைவர் ஆர். யோகராஜன் ஆகியோரும் இங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

சம்பள உயர்வு கடந்த நவம்பர் மாதம் முதல் அமுலுக்கு வரும். இதேவேளை, சம்பள உயர்வுப் போராட்டத்தில் கலந்துகொண்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளரும், ஊவா மாகாணசபை உறுப்பினருமான கே. வேலாயுதம் தமது நன்றியைத் தெரி வித்துக் கொண்டார். மலையகத்தில் நேற்றும் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## கருணா குழு அலுவலகம் மீது கல்முனையில் தாக்குதல்!

கல்முனையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு திறந்துவைக்கப்பட்ட கருணா குழுவினரின் அலுவலகம் மீது நேற்று இரவு 8.45 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சுமார் 15 நிமிட நேரம்வரை நடந்த இந்தத் தாக்குதலில் அந்த அலுவலகத்தில் இருந்த கஸ்ரோ என்பவர் உயிர் இழந்துள்ளார். ஒருவர் தலையில் காயத்துக்குள்ளானார். மற்றொருவர் காணாமல் போய்விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை வீதியில் சைக்கிளில் பிரயாணம் செய்துகொண்டிருந்த கல்முனைக் குடியைச் சேர்ந்த முகம்மது சுபியான் (வயது-44) என்பவர் காலில் துப்பாக்கிச் சூடுபட்டு கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# அம்பாறையில் 23 மாணவர்கள் கடத்திச் செல்லப்பட்டு விடுவிப்பு

## சம்பவம் தொடர்பாகப் புலிகள் விசாரணை

கொழும்பு, டிசெ. 20

அம்பாறை - திருக்கோவில் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கடத்திச் செல்லப்பட்ட ஜி.சீ.ஈ. மாணவர்கள் 23 பேரும், அவர்களது ஆசிரியர்கள் இருவரும் நேற்றுப் பிற்பகல் விடுவிக்கப்பட்டனர்.

16 மாணவிகள் உட்பட 23 மாணவர்களும் தற்போது நடைபெறும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள். இவர்கள் திருக்கோவில் பழைய தபால் நிலையப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் விசேட வகுப்புக்குச் சென்றிருந்த வேளை - நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் - அடையாளம் தெரியாத நபர்களால் வான் ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்டனர்என்றுகூறப்பட்டது.

இவர்கள் காணாமற்போனமை குறித்து பெற்றோர்கள் முறையிட்டதையடுத்து விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ராம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களை விடுவித்தார் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றிலிருந்தே இந்த மாணவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் -

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் -

புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

# வாகரை வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் 7 பேர்!

## துரைரட்ணசிங்கம் எம்.பி. தகவல்

சுகவீனம் காரணமாக மிகவும் ஆபத்தான நிலையில் வாகரை வைத்தியசாலையில் 7 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல ஏற்பாடுகளைச் செய்துதரவேண்டும் என அரசிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்றும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் 'உதயனுக்குத் தெரிவிக்கையில்,

வாகரையில் உள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களையும் மருந்துப் பொருட்களையும் அனுப்பிவருவதாக அரசு கூறிவருகின்றபோதிலும் அப்படி எதுவும் நடக்கவில்லை. தொண்டர் அமைப்புகளால் வாகரைக்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்கின்ற வாகனங்கள் படையினரால் திருப்பியனுப்பப்படுகின்றன.

இதனால், மக்கள் தொடர்ந்தும் பட்டினியால் வாடுகின்றனர். மருத்துவ வசதிகளின்றி அவதிப்படுகின்றனர். அங்கு தொடர்ந்தும் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

இதனால், காயமடைந்தவர்கள் மருத்துவ வசதியின்றி அவதிப்படுகின்றார்கள். கடும் சுகவீனம் காரணமாக வாகரை வைத்தியசாலையில் 7 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக சிகிச்சைக்காக இவர்கள் உடனடியாக மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு மாற்றப்படவேண்டும். இதற்கான வசதிகளை அரசு செய்துதர வேண்டும்.

அத்தோடு வாகரையிலிருந்து அரசகட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடம்பெயருகின்ற மக்களுக்கு அரசால் வழங்கப்படுகின்ற அடிப்படை வசதிகள் திருப்திகரமாக இல்லை என்று இடம்பெயர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாகவும் அரசு ஆராய்ந்து பார்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

(ஐ)

## விடுதலைப் புலிகளை....

(முதலாம் பக்கம் பார்க்க)

காணப்பட்டாலும் இதில் அடங்கியுள்ள 90 சதவீதமான விடயங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகும்.

இதேவேளை, புத்திஜீவிகள் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள தனிப்பட்ட ரீதியிலான யோசனைகளிலும் 10 சதவீதமளவுக்கு நான் இணங்கும் விடயங்கள் உள்ளன. நாம் இவை தொடர்பாக பேச்சு நடத்தவேண்டும். அதனை விடுத்து யோசனை முன்வைக்கப்பட்டமையை எதிர்த்து சர்வகட்சி ஆலோசனைக் குழுவிலிருந்து விலகுவது முறையற்ற விடயமாகும்.

இதேவேளை, இந்த யோசனையைச் சமர்ப் பித்துள்ள புத்திஜீவிகள் குழுவினர் நியமிக்கப்பட்ட போது யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் தற்போது இவர்களின் யோசனையை எதிர்க்கின்றனர்.

புத்திஜீவிகள் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையின் வடிவம் சிறந்ததாகும்.

அந்தக் குழுவின் அபிப்பிராயத்தையே முழுநாட்டு மக்களின் 80 சதவீதமானவர்கள் கொண்டுள்ளனர். அதன் அடிப்படையிலான விடயத்தையே இனப்பிரச்சினைத் தீர்வு யோசனையாக புத்திஜீவிகள் குழுவினர் சமர்ப்பித்துள்ளனர். இந்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகின்றேன்.

இதேவேளை, நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. நான் தனிப்பட்ட ரீதியில் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன். ஆனால், இனவாதக் கட்சிகள் விடுதலைப் புலிகளை தடைசெய்யவேண்டும் என்று கூக்குரல் இட்ட சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி விடுதலைப் புலிகளைத் தடைசெய்யாமல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மட்டும் அமுல்படுத்தியமையையிட்டு நான் திருப்தியடைகின்றேன்.

தற்போதைய நிலைமையில் விடுதலைப் புலிகளை அரசாங்கம் தடைசெய்திருந்தால் நாடு தீவிரமான யுத்தகளமாக மாறியிருக்கும். - என்றார் அவர்.

## பாலசிங்கத்துக்கு...

(முதலாம் பக்கம் பார்க்க)

தரிசித்து அவருக்கு இறுதி வணக்கம் செலுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்து ஈழத் தமிழர்கள் ஏற்கனவே லண்டன் வந்து சேரத் தொடங்கி விட்டனர்.

இன்றைய இறுதி அஞ்சலி நிகழ்வையடுத்து மாலைவேளை - அலெக்ஸான்டிரா மாளிகையிலிருந்து - சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மயானம் ஒன்றுக்கு பாலசிங்கத்தின் உடல் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படும்.

இன்றைய இறுதி நிகழ்வுகளில் நோர்வே உட்பட வெளிநாடுகளின் ராஜ தந்திரிகள் சிலரும் கலந்துகொள்வர் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (ஐ)

## தனியார்...

(முதலாம் பக்கம் பார்க்க)

தொடர்வதால் காங்கேசன்துறைக்கும் திருமலைக் கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீள ஆரம்பிக்க முடியாதுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (அ-1)

## ஒரு தேசத்தின்...

(முதலாம் பக்கம் பார்க்க)

அன்ரன் பாலசிங்கத்தின் அணுகுமுறை 1985இலிருந்து மிகவும் வெற்றிகரமான பேச்சுகளை விடுதலைப்புலிகள் நடத்துவதற்கு உதவியிருந்ததுடன் இறுதியாக தோல்வியில் முடிந்த பேச்சின்போது அவர் வெளியேறியிருந்ததாகவும் ஜஸ்ரின் கூக்லர் குறிப்பிட்டுள்ளார்.

நோயின் பிடியில் துன்பப்பட்ட வேளையிலும் கடந்தமாதம் அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், தேசத்தில் எமது மக்கள் படும் துயரத்துடன் ஒப்பிடும்போது தனது நோய் ஒரு பொருட்டல்ல எனத் தெரிவித்ததாகவும்ஜஸ்ரின் கூக்லர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கிறிஸ்மஸ்...

(முதலாம் பக்கம் பார்க்க)

ரீதியில் தீர்வுகாண்பதற்கு அரசியல் கட்சிகள், சமய நிறுவனங்கள், பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உட்பட சமாதானத்தை விரும்பும் சகல மக்களும் வலியுறுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

(த)

## பன்முக...

(முதலாம் பக்கம் பார்க்க)

அதன் காரணமாக வேலைத்திட்டங்களுக்கான நிதி திரும்பும் அபாயம் உள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இந்நிதியில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் சிலவற்றுக்கு மதிப்பீடுகள் இன்னும் தயாரிக்கப்பட்டு திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்படாதநிலை காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

## இன்றைய...

(முதலாம் பக்கம் பார்க்க)

கிரியையில் கலந்துகொள்வதற்காக இங்கிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் லண்டன் பயணமாவது தொடர்பாக இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. இருந்தும் ஏற்கனவே லண்டன் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான பா.அரியநேத்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இறுதிக் கிரியையில் கலந்துகொள்வர் - என்றார். (ஐ)


பௌதிகவியல்
மாதிரிப் பரீட்சை
21.12.2006
Thu.-1.30p.m.- 4 p.m.
வெளிமாணவர்களும் தோற்றலாம்.
K Selvan
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.



31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
சண்முகநாதன் தையல்நாயகி

தோற்றம் 1928*11*18
மறைவு 2006*11*20





அன்புக்கோர் உருவமும் பண்புக்கோர் புகலிடம்
எம் அம்மாவின் நெஞ்சம் தான்
துன்பத்தால் துடிக்கின்றோம்
நித்தம் நித்தம் காக்க வேண்டுமம்மா
கரங்கூப்பி வணங்குகின்றோம்

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவின் போது உடன் இருந்து உதவி புரிந்தோருக்கும் செய்தி அறிந்து பத்திரிகை, அஞ்சல், தொலைபேசி மூலமாகவும் மரணச் சடங்கின்போது நேரில் கலந்துகொண்டும் எங்கள் துயரில் பங்கு கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

இளவாலை வடக்கு,
இளவாலை.
(58200)
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.



VCM EXAM 1 - 2007

இன்று புதன்கிழமை யாழ்.நகரிலும் வட்டுக்கோட்டையிலும் நடைபெறவிருந்த பௌதிகவியல் 1 பரீட்சை நாளை நடைபெறும்.

(புதன் நேர அட்டவணைப்படி)



CB Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.
Diploma in Internet & E-Mail
Speed Batch Only 10 Hours
Start On - 23.12.2006
Days :- Sat, Sun
Time :- 11.00 a.m
Only For 10 Students
Fee :- 1000/=
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.



மரண அறிவித்தல்

சகோ. பிலிப்பையா அருளானந்தம்

(எக்காலத் தொனி சபையைச் சேர்ந்த விசுவாசி)

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் நக்காலேன்,இல.50, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா அருளானந்தம் நேற்று(19.12.2006)செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இன்று(20.12.2006)புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் வைத்து நல்லடக்க ஆராதனை இடம்பெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தாவடி கல்வாரி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருளானந்தம் றோஸ் மலர் (மனைவி),
பிள்ளைகள்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org